வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

செய்தித்தாளாகப் பதிவுபெற்றது

உ
சிவமயம்

# இந்து சாதனம்
# HINDU ORGAN

சைவ பரிபாலன சபை வெளியீடு

பிரதி விலை சதம் 20

ஆரம்பம்: விரோதி வூ (1889) ஆவணிமீ 28-ம் உ   அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.   தொலைபேசி: 356

புத்- அஅ]   யாழ்ப்பாணம்:-   நள வூ   மார்கழிமீ உஉ - உ   வெள்ளிக்கிழமை   7 - 1 - 1977)   [இல : ௬0

# மனங்கவர் மலேசியத் திருநாடு மாண்புறு பெருமையுடைத்து

[ மலேசியாவிலிருந்து நமது ஆசிரியர், திரு நம. சிவா அவர்கள் ]

மலைவளம் தண்புனற் செழிப்பு மற்றும் இயற்கை வனப்பு யாவும் ஒருங்கமைந்து விளங்கும் மலேசிய நாட்டின் மாண்புக்கு ஆங்குள்ள ஆலயங்கள் சான்றுபகர்கின்றன. சைவ மக்களைப் பொறுத்தவரை மலேசியநாட்டில் எங்கணும் பொலிந்து துலங்குகின்ற திருக்கோயில்கள் சமய உணர்ச்சியின் செம்மையைச் செப்புகின்றன வென்று கூறலாம்.

பெரும்பான்மையினர் மகமதிய மதத்தவர்களாக இயங்கும் இந்நாட்டில் இந்துக்கள் இட்டப்படி இறைவனை வணங்கும் பெருவாய்ப்புப் பெற்றிருக்கின்றனர் என்பது அரியதோர் பேறேயாகும்.

திருக்கோயில் இல்லாத திருவில் ஊரும் என்று தேவாரத் திருவமுது படைத்த திருத்தொண்டர்கள் குறிப்பிட்டாங்கு மலேசியா திருவுடைய பெருநாடாக விளங்குகின்றது.

திருக்கோயி லில்லாத திருவி லூரும்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினொடு பலதளிக ளில்லா வூரும்
விருப்போடு வெண்சங்க மூதா வூரும்
விதானமும் வெண் கொடியு மில்லா வூரும்
அருப்போடு மலர் பறித்திட் டுண்ணா வூரும்
அவையெல்லா மூரல்ல அடவி காடே.

— அப்பர்

ஈழநாடுபோன்ற மலேசிய தேசத்திலும் போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் போன்ற புற மதத்தினர் அரசு செலுத்திய காலம் இருந்தது, அந்நியர்களின் அட்டூழியத்தினால் ஆலய அமைப்புக்கள் அழிந்தொழிந்துபோகாது சைவ மக்கள் காப்பாற்றி இறைபணி இயற்றியிருப்பதை நேரிற் பார்க்கும்பொழுது யார்க்கும் உணர்ச்சி உண்டாகும் என்பதுண்மை. பார்க்குமிடம் எங்கும் உணர்ச்சி உண்டாகும் என்பதுண்மை பார்க்குமிடம் எங்கும் நீக்கமற நிற்கின்றான் என்ற தத்துவக் கருத்தை அநுபவத்திற் கண்டு களிக்கும் பாக்கியம் மலேசிய நாட்டிலே சுற்றுப் பயணம் செய்யும் அன்பர்களுக்கு உரியது

(வளர்ச்சி ?ம் பக்கம்)

## செனகலின் தலைநகரில் செந்தமிழுக்குப் பெருவிழா

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின ஐந்தாவது தமிழாராய்ச்சி மாநாடு இந்த ஆண்டு இறுதியில் (டிசம்பர் முதல ஜனவரி முற் பகுதி வரை) ஆபிரிக்க நாடுகளுள் ஒன்றான 'சேனகல்' நாட்டில் - அதன் தலைநகரான 'டக்கார்' நகரில் கோலாகலமாக நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மெக்சிக்கோவில் நிகழ்ந்த உலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தின் பொதுக் கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பெற்றது. ஆறுவது மாநாடு இலண்டன மாநகரில நடைபெற வேண்டுமென ஆங்குள்ளோர் வேண்டியுள்ளனராம.

## இந்து சமயமும் வாழ்க்கையும்

[ திரு. ந. சோமசுந்தரம் இருபாலை ]

சமயம் என்பது கடவுளும் கடவுளை அடைவதற்குரிய வழியையும் பற்றுச் சொல்வது. இந்து சமயம என்பது இந்தியாவில் இருந்த மக்கள் தம்வாழ்வில் கடவுளை அடைய கடைப் பிடித்த அல்லது அனுசரித்த வழி முறைகள அல்லது ஒழுக்குகள என்று பொருள் படும்,

இந்துக்கள் தம் வாழ்வில் கடவுளை அடைவதை நோக்கமாகக் கொண்டு கடைப்பிடித்தவை இன்னது இன்னது என்பதை விபரமாக ஆராய்ந்து பார்ப்போம்.

பெரிய தீங்குகளாகக் கருதப்படும கொலை, களவு, கள், காமம், பொய் ஆகிய ஐந்தையும் தவிர்த்து வாழ்ந்தார்கள். கொலை என்பது ஒரு உயிரை அதற்கு நிலைக்களனாய் இருக்கின்ற உடலில் இருந்து பிரித்தல ஓர் உயிரை அதன உடலில் இருந்து பிரிப்பதற்கு அந்த உயிரை அந்த உடலுக்குள் விட்ட கடவுள் ஒருவனுக்கே உரிமைஉண்டு. அடுத்த படியாக இப்பூவுலகில் நீதி, நியாயம் தர்மம இவற்றை நிலை நிறுத்தக் கடமைப்பட்டுள்ள அரசனுக்கே உரிமை உண்டு. இவ்விருவரையும் தவிர வேறு எவருக்கும் அந்தஉரிமை இல்லை ஆதலால அதைச்செய்வது இந்த உலகில் இறைவன் வாழ என்று விட்ட உயிரை அவசியமின்றி பிரிப்பது பெரிய குற்றமாகும். ஆதலால் இதை செய்யக் கூடாது.

களவென்பது இயல்பாக ஒருவருக்கு உடைமையாகவுள்ள ஒன்றறை அவரை அறியாமல் எடுத்தல. இது குற்றமாகும். ஏனெனில் ஒருவர் தமக்கு உரியதாய் பயன் பேறவைத்திருப்பதை அவரை அறியாமல எடுத்தால் அவரது உபயோகத்தைத் தடுத்து நிறுத்துகின்றது. அது நியாயமற்றதாகும், அத்தோடு உலக உண்மைக்கு மாசு கற்பிப்பதாகவும் அமைந்துளளது. அதாவது எல்லாவற்றையும எல்லா


(வளர்ச்சி 3ம பக்கம்)

# தாயினும் நல்லவர்

வித்துவான் க. சொக்கலிங்கம் [ சொக்கன் ]
(தலைவர், யாழ். நா. சைவ சமய அபிவிருத்திச் சமூகம்.)

1950 -- 51 ஆம் ஆண்டுகளிலே செந்தமிழ் மணி பொன் கிருஷ்ணபிள்ளை அவர்களிடம் தமிழ் கற்கும் பெரும் பேறு எனக்குக் கிடைத்தது. பிள்ளை அவர்கள் வகுப்பறைக்கு வந்தாலே ஒரு கலகலப்புத்தான். அவர் சொல்லும் கதைகளைக் கேட்டுச் சிரித்துச் சிரித்தே வயிறு புண்ணாய் விடும். சிரிப்போடு சிந்தனையையும் எம்மிலே தேக்கிவிடும் சமர்த்து அவருக்குக் கைவந்த கலை.

ஒருமுறை பலாலி ஆசிரிய கலாசாலைக் கவின்கலை மன்றம் திருவள்ளுவர்



கற்கண்டு மனிதர் -

விழாக் கொண்டாடியது அவ்விழாவின் பிரதம பேச்சாளர் புலவர் மணி சோ. இளமுருகனார் அவர்கள். அவருக்கு அளித்திருந்த தலைப்பு 'வள்ளுவன் வாய்மொழி' என்பது செந்தமிழ் மரபைச் சிறப்பாகப் பேணிக் காத்து வந்த அத்தமிழ் அறிஞர் தமது பேச்சினிடையே 'வள்ளுவன்' என்று நாம் குறித்ததைக் கண்டித்தார். "நம் முன்னோராம் புலவர் பெருமக்களை 'அவன் இவன்' என்று குறிப்பது தவறாகும். வள்ளுவன் என்ன நம் அடுத்த வீட்டுக்காரரா? அவரைத் திருவள்ளுவர் பெருமான் என்று குறித்திருத்தல் வேண்டும் அதுவே மரபு" என்று பொருள்பட அவர் பேசினர்.

விழாவின் தலைவரான எம் ஆசிரியப்பிரான் தமது முடிவுரையிலே புலவர் மணியின் ஆட்சேபத்திற்குப் பின்வருமாறு பதில் அளித்தார். "அன்

(வளர்ச்சி 2ம பக்கம்)

## 2ஆவது ஆண்டுவிழாவும் கலை நிகழ்ச்சியும்

யாழ். நாயன்மார்கட்டு சனசமூக நிலையத்தின் 2-ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பொங்கல் விழாவும் தை முதல் நாளன்று அந் நிலையத் திறந்த வெளியரங்கில் பிற்பகல் 6-00 மணி முதல் நிகழும். மாணவ மாணவிகளின் சிற்றுரையை வித்தகச் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும். கலை நிகழ்ச்சிகளில் 'குரு பக்தி' 'குறள் அரங்கேற்றம்' என்கிதெல்லாம் ?ற்றி 'மதன மாளிகை' ஆகிய நாடகங்கள் நடைபெறுமென நிலையச் செயலாளர் தி. திருச்செல்வம் தெரிவிக்கின்றார். (ந. நி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர்தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

நள ஹூ மார்கழி மீ உ௩ - உ வெள்ளி

## உலக இந்துப் பேரவை

முதலாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை நடாத்திய பெருமை மாலேசியாவிற்கு உரியது. இப்பொழுது உலக இந்துப் பேரவையின் இரண்டாவது மாநாட்டை நடாத்திய பெருமையும் மலேசியா தட்டிக் கொண்டது அந்நிய நாடுகளில் வாழும் தமிழர்களும் இந்துக்களும் மொழியின் மீதும் மதத்தின் மீது கொண்டுள்ள மகத்தான பற்றுக்கு இவையிரண்டும் சான்றாகும், பிறநாடுகளில் வசிக்கும் தமிழர்கள தங்களுடைய கலை கலாசாரமீது கொண்டுள்ள பற்று அளவிடமுடியாதது.

மலேசிய இந்து சங்கம் ஆலய நிர்வாகம் அனைத்தையும் கூட்டுறவு முறையில நிர்வகிக்கவும் இந்துக்கள் மதமாற்றத்துக்கு இலக்கராகாமல் காக்கவும் பத்து ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்டது. இத்தசாப்தத்தில் இருநூறு ஆலயங்களையும் நிறுவனங்களையும பல்லாயிரக் கணக்கான உறுப்பினர்களையும் இச்சங்கம் பெற்றுள்ளது. இதன் பத்தாவது ஆண்டு விழாவில் இலங்கையிலிருந்து திருவாளர்கள் நம சிவப்பிரகாசமும், ஆத்மஜோதி நா. முத்தையாவும் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் கலந்து கொண்டார்கள். உலக இந்துப் பேரவையின் அடுத்த மாநாடு இலங்கையில் நடைபெறவேண்டும் என்பதும் அதற்கு ஜகத்குரு சங்கராச்சாரிய சுவாமிகளை தருவிக்க வேணடும் மென்பதும் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

இம்மாநாட்டில் ஒரு முஸ்லிம் அமைச்சரும் கலந்து கொண்டாரென்பது இங்கு குறிப்பிடத்தக்கது இவ்வேளையில் சிங்கப்பூரில் தமிழ் உட்பட நான்கு மொழிகள் தேசிய மொழிகளாக இலங்குவதும் குறிப்பிடத்தக்கது. அந்நாட்டின் ஆளும் கட்சி சமீபத்தில் நடைபெற்ற தேர்தலில் மீண்டும் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்றிருப்பது மொழி என்பது ஒரு பிரச்சினைக்குரிய விஷயமே அல்ல என்பதை தெளிவாக்குகின்றது.

இன்று போல் உலகத்தில் சமயப்பிரசாரத்திற்கு அத்தியாவசியம் வேறு எப்போதும் இருக்கவில்லை குழப்பங்கள், அமைதியின்மை, புரட்சி, பேராசை, யுத்தபயம் உலகத்தில் நிலவுகின்றன. இந்தவேளையில் உலக இந்துப் பேரவை உதயமாகியிருப்பது வரவேற்கத் தக்க ஒரு விஷயமாகும்.

பிறநாட்டவர் மத கிரியைகளை ஏன் எதற்கு என்று தெரியாமல் கடைப்பிடிப்பதனுல் மதத்தின் மீது அவநம்பிக்கையே ஏற்படக்கூடும என்பதை அவதானித்த ஒரு பிரயாணி கலாநிதி கா. கைலாசநாதக் குருக்களிடம் இந்து சமயக் கிரியைகளின் அர்த்தம் என்ன என்பதை விளக்கும் ஒரு ஆங்கில நூலை வெளியிடும்படி கோரிக்கை விடுத்தது நினைவுகூரத்தக்கது. லோகாயதம் மலிந்துவிட்ட இந்த நாட்களில் இளைஞர்களை நன்னெறிப்படுத்த, நல்வழிகாட்ட, இத்தகைய பிரசுரங்கள் அத்தியாவசியம். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அன்று செய்த பணியைத் தொடர யாழ்ப்பாணம் தான் முன்வரவேண்டும்.

ஏகதாரத் திருமணத்தை அரசியல் சட்டமாக்க வேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானித்தது. இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளில் இத்தகைய சட்டம் அமுலில் இருக்கிறது இது ஒரு பொருளாதாரப் பிரச்சினையேயாகும். யுத்தம முதலான பல்வேறு காரணங்களினுல் குடிசனத் தொகையில் ஆண்கள் குறைவாய் இருக்கும் நாடுகளில் பலதாரத் திருமணம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும சமுதாய கட்டுக்கோப்புக்கு இது அமைவானதல்ல.

உலக இந்துப் பேரவையின் நோக்கங்கள் ஈடேறவும், சைவம் தழைக்கவும், நான்மறை அறங்கள் ஓங்கவும் நாம் எல்லோரும் வாழ்த்துவோமாக.

## மனங்கவர் மலேசியா

1 ம் பக்கத்து வளர்ச்சி

பெரும்பற்றப் புலியூரானைப் பேசுவார் நாளெல்லாம் மலேசியப் பிரதேசத்திலுள்ள சைவ மக்கள் பூசனை உகந்து அடியார் சிந்தையுட் புகுந்த பூங்கழல் காட்டிய வண்ணம் செழுஞ் சுடர் மூர்த்தியாம் சிவபெருமான் திருவருள் பொலிகின்றார் இந்தவள நாட்டில் அடியார்கள் ஆதரித்தழைக்கின்றனர். 'அது எந்துவே என்று பசுபதிக கடவுள் ஆறுதல் கூறுகின்றனர்.

X X X

தோத்திரம் செய்து தொழுமின் போலும்பொய்த் தோற்றம்பல
மாத்திரைப் போதும் மனத்தில்வைத் தேபலர் வாழ்த்துகின்ற
நற்பண்பை
மலேசிய நாட்டில் மனங்குளிரக் கண்டேம் களித்தேம்

ஆலயந்தொழுவது சாலவும் நன்று என்ற சீலம் சைவச்சால்பு, தொன்றுதொட்டு வழங்கிவரும் அரிய பாரம்பரியம். மலேசிய தேசத்தில் வாழ் இந்துக்கள் திருக்கோயில் சூழ்கின்றார்கள் - வாழ்க அவர்கள் யாவரும்.

திருச்சிற்றம்பலம்.

ஏதுக்களாலும் எடுத்தமொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி
மாதுக்கம் நீங்கல் உறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே

திருச்சிற்றம்பலம்.

## பொங்கல் விழா

சிறைச்சாலை முருகன் கோவில்- 29-12 76 முதல் 5-1-77 வரை ஆகிய திருவெம்பைக் காலத்தில் விசேட பூசை, திருவெம்பவை ஓதுதல், திருவாசக பாராயணம் என்பன சிறப்பாக நடைபெற்றன.

14-1-77 தைப்பொங்கல் அன்று காலை 9 மணிக்கு பொங்கல் விசேட பூசை கூட்டுப்பிரார்த்தனை என்பன நடைபெறும். சைவப் புலவர் திரு, வ, கந்தசாமி ஆசிரியர் கதாப்பிரசங்கம் [illegible] உரைவழங்குவார்.

கோப்பாய் திறந்தவெளிச் சிறையில் காலையில் பொங்கலும், மாலை 2மணிக்கு விசேட பிரார்த்தனை உபந்நியாசம் என்பன நடைபெறும். ஞாயிறுதோறும் நடைபெற்று வரும் உபந்நியாச நிகழ்ச்சியில் பலகைதிகள் பங்குபற்றுகிறார்கள். ——

## தாயினும் நல்லவர்

1-ம் பக்கத்து வளர்ச்சி

பின் மிகுதியால் நாம் ஒருவரை அழைக்கையில் 'அஃ' விகுதி கொடுப்பது தவறு என்று நான் கருதவில்லை. சிவனை யாரும் 'சிவர்' என்று அழைப்பதுண்டா?" இந்தப் பதில் நகைச்சுவையோடு கூடிய தாயினும் சிந்தனையைத் தாண்டவில்லையா? இப்படி எத்தனை எத்தனையோ கருத்துக்களை வாழைப் பழத்திலே ஊசியை ஏற்றுவதுபோல எமமில் ஏற்றிய பெருந்தகை அவர்.

அக்காலத்தில் ஈழகேசரி தான் என் கன்னி எழுத்துக்களுக்குக் களம் சமைத்துத் தந்தது. அடிக்கடி சிறுகதை என்றும் கவிதை என்றும் நாடகம் என்றும் அப்பத்திரிகையில் நான் எழுதிவந்தேன் அவற்றை வாசித்து வகுப்பறையிலே மாணவர்களின் முன்பு என்னைப் பலவாறு வாய்விட்டுப் புகழ்ந்து ஊக்கிவந்தவர் என் ஆசிரியப்பிரான் அவர்கள். எனது 'குட்டைநாய்' சிறுகதைக்கு அவர் ஒரு புகழ்மாலையே சாத்திவிட்டார் என்றுதான் சொல்லவேண்டும. "இப்படியானவர்கள் ஆசிரியப் பயிற்சியிலே வீணாகக் காலத்தைப் போக்கிறுங்கள். இவர்கள் யூனிவேசிற்றிக் கல்லூரி படிக்கப் போயிருக்கவேணும்!" என்று அவர் மனந்திறந்து சொன்ன பாராட்டுரையை நான் எப்படி மறந்துவிட முடியும்?

உணர்ச்சி நிறைந்த உள்ளத்தரான அவர் அந்த நேர உணர்ச்சி காரணமாக அவ்வாறு மிகைபடச் சொல்லியிருக்கலாம். ஆனல் அந்தக் கள்ளமற்ற நல்லுள்ளத்தின் ஆசிர்வாதம் விரைவிலேயே நிறைவேறி ஈராண்டுகள் நான் பல்கலைக்கழகத்தில் 'தமிழ் டிப்புளோமா' பயிற்சி பெற்றதை எப்படி மறப்பேன்?

[illegible] அடிக்கடி [illegible] களான எங்களை "அலகம். வாங்கு, தேவாங்கு" என்றெல்லாம் ஏசுவார். அடுத்தகணமே அதனை மறந்து தப் அறைக்கு அழைத்துத் தமது உணவிலே பங்கு தந்து அன்பொழுகப்பேசி எம மனத்தாகத்தைப் போக்கிவிடுவார். மற்ற விரிவுரையாளர்கள் 'நீர்' என்று அழைக்கும் பரியாதைப்பன்மையிலும் 'டே! வாடா' என்று அழைக்கும் பிள்ளை அவர்களின் அன்பொருமைக்குத்தான் நாங்கள் கூடிய மதிப்பளித்தோம். 'தாயினும் நல்லன்' என்ற கம்பனின் சொற்றொடருக்கு எம் ஆசிரியப் பெருந்தகையே சிறந்த உதாரணர்.

அவர் இரக்கமே வடிவானவர். 'பிச்சை' என்று எவர் வந்தாலும் தாமாக இயன்றதைக் கொடுக்க அவர் தவறுர். "என்ன சேர்! இந்தத் தடியனுக்கு ஏன் கொடுத்தீர்கள்? இவன் போன்றவர்கள் உழைத்துப் பிழைக்க முடியாதா?" என்று நாங்கள் கேட்டால் அவருக்கு அது பிடிக்காது. "டே! அவனை பசிகாரணமாகத் தன் சுயமரியாதையையும் விட்டு வந்து எங்கள்முன் பல்லைக் காட்டி நிற்கிறனடா. அவன் மனத்தை நாம் புண்படுத்தக்கூடாது. எங்கள் கடமை எங்களுக்கியன்றதைக் கொடுத்துக் கொடுத்ததை உடனே மறந்து விடுவதுதான். பிச்சைஎடுக்கத் தகுதியானவனு தகுதியில்லாதவனு என்ற ஆராய்ச்சி எல்லாம் எமக்கெதற்கு? விட்டுத்தள்ளு" என்பார் அவருடைய பண்பட்ட மனநிலை எமக்கு அன்று விளங்கவில்லை என்பது உண்மைதான் "பண்டிதரையாவை எல்லாரும் இலகுவில் ஏமாற்றிவிடலாம்" என்றுதான் நாங்கள் அக்காலத்தில் நினைத்துக் கொள்வோம். எவ்வளவு தவறுன கணிப்பு!

கோயில்களில் உரத்துச் சத்தம்போட்டுத் தேவார திருவாசகங்களை உருகுவது அவர் வழக்கம். "இதென்ன சேர்! நீங்கள் எவ்வளவு பெரியவர்? மனத்தில் நினைத்துப் பத்திசெய்து வழிபட்டால் என்ன?" என்றால் அதற்கும் உடன் பதில் வரும். "நீங்கள் சின்னப் பொடியள். உங்களுக்கு இதெல்லாம் விளங்க நாளாகும். அப்பர் பெருமானே தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடினர் என்றால் எங்களைபபோன்ற சிறியவர்கள் எப்படியெல்லாம் அவனை வணங்கவேண்டும்! அவரவர் தத்தம் அறிவுக்கும், உணர்ச்சிக்குமேற்ப வழிபடுவார்கள். அதைப் பற்றி நாம் கருத்துரை வழங்குவது தவறு" என்பார் எத்தகைய பண்பட்ட உயர்ந்த உள்ளம்! 'பிறர் பழிகூற நாணும்' அந்த உள்ளத்தின் உயரவை என்ன வென்பது!

பண்டிதமணி கதிரேசஞ்செட்டியாரின் திருவாசக உரை நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளையின் திருக்குறள் உரை ஆகியவற்றிற்கு விமர்சனம் எழுதியபொழுது அவரின் பேரறிவும், கண்டனத் திறமும் எங்களுக்குப் புலனுயின், புதுமையைப் போற்றி இருகரமும் நீட்டிவரவேற்ற அப்பெரியார் பழமை மரபினைப் பேணிப் பாதுகாப்பதிலும் எவ்வளவு உறுதியாயிருந்தார் என்பதை அந்த விமாசனங்களை வாசித்தால் நன்கு அறிந்து கொள்ளலாம்.

'உண்ணாமை வேண்டும் புலாஅல்' என்ற குறளுக்கு நாமக்கல் கவிஞர் பரிமேலழகரின் உரைக்கு முரணுகக் கருத்து வழங்கியிருந்தார். இதனை எம் ஆசிரியப்பிரானுல் பொறுக்கக் கூடவில்லை, கவிஞரின் கருத்து முரணை வகுப்பறையிலே வன்மையாக அவர் கண்டித்தது இன்றும் நினைவில் பசுமையாக இருக்கிறது.

எனது முதலாவது நூலான 'வீரத்தாய்' வெளிவரக்காரணராய் இருந்தவரே பிள்ளை அவர்கள் தாம். என்னை ஊக்கி ஆசி தந்து முன்னுரைவரைந்து தமது மைத்துனர் 'யாழ்ப்பாணன்' அவர்களின் கலாபவனத்தில் நூலை அச்சேற்றுவித்துதவித்த நன்றியை நான் எவ்விதம் மறப்பேன்? எப்பொழுது என்னைக் கண்டாலும் 'சொக்கா' என்று அழைத்து அன்போடு நாடியைத் தடவி என் முயற்சிகளுக்கு மனப்பூர்வமான ஆசிகள் வழங்கிய மனித தெய்வம் அவரன்ரே?

ஆம்! செந்தமிழ்மணி பொன். கிருஷ்ணபிள்ளை அவர்கள் தாயினும் நல்லவர்தாம்; சந்தேகமேயில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னந் துயிலுவதோ — என்னே இது

இன்னம் புலர்ந்தின்றோ என்று திருவெம்பாவை பாடி வீதிகள்தோறும் விடியற் காலையில் எழுகின்ற குரலோசையும் சங்க நாதமும் கேட்டும் கேளாதார் போல வாளா கிடக்கின்ற மனிதர்காள், என்னே உங்கள் துயிலின் பரிசு?

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழி லியம்ப வியம்பும்வெண் சங்கெங்குங்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவா
யாழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறோ
வூழி முதல்வனாய் நின்ற வொருவனை
யேழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்?

உறக்கம் வேண்டாம். வாய் திறக்க வேண்டும்; ஏழை பங்காளனைப் பாட வேண்டும் என்னும் இப் பாட்டைக் கேட்டுக்கொண்டுமா சைவமக்கள் துயின்று வருவது?

மார்கழித்திங்களில் எம்முன்னோர் எமக்கு வழி காட்டி ஊர்கள் தோறும் மக்களைப் புலர்வதன்முன் துயில்நீத்து ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியைப்பாடி வாழ்த்துநெறியைக் கற்பித்து வந்தனர் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் இப் பண்பாட்டிலே படிந்து வந்தனர். ஆனால் இன்று நாம் அத்தனை உத்தமர்களாக வாழ்வதற்கேன் மறுக்கின்றோம். பிறவித்துயர்கெட நாங்கள் பெருமானைப்பாடி நலந்திகழ வேண்டாமா?

நாமெல்லோரும் நம மனத்தைப் பக்குவப்படுத்த வேண்டும். கண்களைத்திறந்து சிவக் காட்சியைக் காண வேண்டும்.

''பதத்தே உருகிநின் பாதத்திலேமனம் பற்றி உன்றன் இதத்தே ஒழுக அடிமை' கொள்ளும்படி இறைவனை வணங்கி வாயார அவன் புகழைப் பாட அருந்தருணம் திருவெம்பாவைக்காலமல்லவா இந்தப் புனிதவேளை முடிந்துவிட்டது. ஆனால் அவ்வாறு ஒழுகியதாகக் காணப்படவில்லையே.

தைத்திங்களும் உதயமாக இருக்கும் இவ்வேளையில் சைவமக்களாகிய நாம் ''பிறவா நாட்களைக்'' குறைக்கப் பழகுதல் வேண்டும். உலகம் கலகமாய்விட்டது உயர்ந்தவர்கள் இல்லாதகாலமிது. அத்தன்மை நீங்க உத்தமராய்வாழ வழி சைவநெறியைக் கடைப்பிடித்தலே ஈசனைச்சிக்கெனப் பிடிக்க இறைவழிபாடு செய்து அவ்வழி உலகையீடேற்றுவோமாக.

# இந்து சமயமும்

1-ம் பக்கத்து வளர்ச்சி

விடத்தும். எல்லாநேரமும் அறிந்து கொண்டிருக்கிற இறைவனது உண்மையை மறைப்பது போலாகும். அதற்காகவே இறைவன் இக்களவு என்னும் செயலால் மிகுந்த கோபத்துக்குள்ளாகுகின்றான் தான் எங்கும் விரிந்து,பரந்து வியாபகமாய் இருக்க தமது குழந்தையாகிய ஒரு உயிரது உடைமையை இன்னுமொரு குழந்தை தாம் இல்லை என்று நினைத்து எடுத்தால் முந்தையாய் இருந்தாலும் தக்க தண்டனை கொடுக்க இறைவன் ஆயத்தமாகின்றான். ஆகவே களவு தவிர்க்கப்பட வேண்டியதொன்றாகும்.

கள் என்பது போதைப் பொருள் அதாவது இயற்கையான உள்ள நிலையைமாற்றி அமைப்பது போதைப் பொருள், இப் போதைப் பொருள் அருந்தினால் மயக்கம் உண்டாகின்றது உள்ளநிலை பிறழ்கிறது. இந்நிலையில் இயற்கை நிலையில் இருந்து செய்யாத தீய்மையான காரியங்களைச் செய்ய உந்தல் ஏற்படுகின்றது ஆகவே தீங்கான செயல்களைச் செய்ய உந்துகின்றபடியால் இதைத் தவிர்க்கவேண்டும்

(வளரும்)

# Ganapatyam — Some Aspects

(Continued from page 4)

note small shrines under the pipal (arasu) tree or the margesa tree.

There are some important vratas of this God. Of these the monthly caturdhi (the fourth day of the bright half of the month especially during the month Avani (Sravan) may be mentioned. The Vinayaka Caturdhi of this month is celebrated with great splendour in many parts of India and Ceylon, particularly in Maharastra where it is a great national festival. It is worthwhile to remember that B. G. Tilak the father of the real Indian Independence movement made use of the Ganesa Caturdhis to instil nationalism and religious devotion in his country. Of the other Vratas, the Pillaiyar Perumkatai (the period of 21 days during Karttikai and Markali) culminating on the sixth day of the bright half of the month Markali is very important. It is called the Vinayaka Sasti day. According to the Hindu mythology Visnu who was cursed by the Goddess Parvati to become a surpent for false evidence was freed from the curse after profiating Vinayaga during the 21 days. During the 21 days, Pillaiyar Perumkatai (the stories recounting the greatness of Vinayaka) is read by the devotees in the temple or in houses. The Puranas and stories dealing with His greatness are also recited. In some temples, laksaroanas (Repetition of one lakh names of the God) are performed daily during this period.

The worship of Vinayaka has spread to Central Asia South East Asia, China and Japan especially through Buddhism. As a result, one can notice different names of this God in these countries. In South East Asia, Ganesa worship was spread by Hindu colonists and traders too. Thus, He is known in many parts of Asia.

# சிதம்பரமும் ஆருத்திரா தேரிசனமும்

[ ''திருவாசகமணி'' க. மாணிக்கவாசகர் அவர்கள் ]

(முன் வளர்ச்சி — 2)

அது சிதம்பரம், சிற்சபை, கனகசபை, தேவசபை, நிருத்தசபை, இராசசபை ஆகிய சபைகளால் அமையப் பெறது.

சிற்சபையிலுள்ள மேல் கூரை வேய்ந்துள்ள ஒவ்வொரு பொன் ஓட்டிலும் ''சிவாயநம'' என்ற சூக்கும பஞ்சாட்சரம் எழுதி வேய்ந்திருப்பதாகத் ''தில்லையுலா'' என்ற பிரபந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது

சிதம்பர நடராஜப் பெருமானுக்கு ஆறு அபிஷேகங்களுள் மார்கழித் திருவாதிரைநாள் அபிஷேகமும் 'ஆருத்ரா தெரிசனமும் கண்கொளா காட்சியாகும். ''எம் கர்த்தனை பொன்னம்பலம் ஆடும் ஐயனைக்காண கண்கள் எத்தனை கோடி யுகமோ தவம் செய்திருக்கின்றனவோ' என்று பட்டினத்தடிகள் விளக்கம் கூறியிருக்கின்றார். இவ் வரிய தரிசனம் ஆயிரங்கால் மண்டபத்தில் அரவொலி ஆகமங்கள் அறிவார் அறிதோத்திரங்கள் விரவிய வேதஒலி எங்கும் செறிந்திருக்கும். உலகத்தில் உள்ளோர் சிதம்பரத்தை மானத பூசை செய்து வழிபடுவார்கள்.

ஏறக்குறைய 40 ஏக்கர் கொண்ட சிதம்பரக் கோவில் கோபுரங்கள் சரித்திரப் பிரசித்தி பெற்றவை. வடக்கு இராஜ கோபுரம் விஜயநகர் கிருஷ்ணதேவரால் ஒரிஸா வெற்றியின் சின்னமாகக் கட்டப்பட்டது. இதன் உயரம் 40 அடி. கிழக்கு ஏழு நிலை கோபுரத்தை விக்கிரம சோழன் மகனை இரண்டாம் குலோத்துங்கன் 2ம் நூற்றாண்டில் கட்டி முடித்தான். தெற்கு ஏழு நிலை கோபுரத்தைசொக்கச் சீயன் என்ற முதற்கோப்பெருஞ்சிங்கன் 13-ம் நூற்றாண்டில் கட்டிமுடித்தான். அருணகிரிநாத சுவாமிகள் தமது சிதம்பரதிருப்புகழில் ''வடக்கு கோபுர வாயலில் மேவிய தம்பிரானே' என்று கோபுரங்களின் எழில் தோற்றத்தைக்கண்டு இன்புற்றார்.

மெய்கண்ட சாத்திரங்களில் ஒன்றான திருக்கடவூர் உய்யவந்த தேவரால் பாடப் பெற்ற 'திருக்களிற்றுப்படியார்'' சிதம்பரத்தில் சிறப்பினைப் பெற்றது. இந்நூல் 100 வெண்பாக்களால் தத்துவங்களையும் சிவபக்தி, சிவனடியார் பெருமைகளையும் விளக்குகிறது.

எங்கள் நாவலர்பெருமானையும் சிதம்பரநடேசர் ஆட்கொண்டார். பெருமான் அவர்கள் சிற்றம்பலமே இடமாகக் கொண்டு அங்கே பசுந்தேன் ஞானமாகிய சித்தாந்தச் செந்நெறிபரப்பி சைவ மக்களுக்கு சிவசேவை செய்து சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலையை இரத்தாக்ஷி ஹூ ஐப்பசிமீ 28ம் திகதி ஸ்தாபித்தார். அதன் வளர்ச்சியினைக் கண்டு இன்புற்றார். இறுதி நேரத்திலும் மணிவாசகரின் திருவாசக நெறிதான். தம மாசில்லா ஆன்மா சிதம்பர நடேசரோடு அத்துவிதக் கலப்பை அடையும் மட்டும் புணர்ச்சிப் பத்துவில் ''அல்லிக் கமலத்து அயனும் மாலும்' என்ற பாசுரத்தை இடைவிடாமல் பாடச் சொன்னார்.

திருமூலநாயனர் 3000ம் வருஷம் யோகத்திலிருந்து ஆண்டுக் கொரு பாவாக 3000 திருமந்திரங்களை அருளிச்செய்து ''அம்பலக்கூத்தனை யார் அறிவாரே'' என்ற சிதம்பரத்திலே சமாதி நிலை எய்தினார். திருநாளைப் போவார் என்றும் நந்தனாரும் இங்கே முத்தியடைந்தார்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், சமயகுரவர்கள், சேக்கிழார், பட்டினத்தடிகள், அருணகிரிநாதர், தாயுமானுர்கள், இராமலிங்கர். யோகசுவாமிகள், பத்தர்கள், முத்தர்கள் வணங்கியேத்தும் சிதம்பரமே! சிந்தை விட்டு நீங்காதே.

''ஓமசவந்தியும் உறவென்றிட்டு உள்கசிந்து
தேடும் பொருளும் சிவன்கழல் எனத்தெளிந்து
கூடும் உயிரும் குமண்டையிட்டு குனித்தடியேன்
ஆடும் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே''

— குலாப்பத்து

# விசேட பொதுக் கூட்டம்

சென்னை - ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி கோவிலினதும் பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவில்) துவாதசி மடத் தருமத்தினதும் விசேட பொதுக் கூட்டம் (9-1-77) ஞாயிற்றுக் கிழமை பி. ப, 6-30 மணிக்கு மேற்படி ஆலயத்தில் தலைவர் திரு. க சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும். ஆலயத்தின் புனருத்தாரண திருப்பணி பற்றியும் பிறவும் ஆராயப்பெறும் என ஷெடி ஆலய தர்மகர்த்தா சபையினர் அறிவிக்கின்றனர்

# பொங்கல் விழா

பண்ணாகம் ஐக்கிய இளைஞர் கழகம் பண்ணாகம் பிரதான வீதியில் கோயில்கொண்டு எழுந்தருளி அருள்பாலிக்கும் ஆலடி வைரவர் கோவில் முன்றலில் தைத் திருநாளன்று பொங்கல் விழாவை நடாத்தவுள்ளனர்.

அன்று பிற்பகல் 2 மணிமுதல் கூட்டுவழிபாடு, சிறப்புச்சொற்பொழிவு ஆகியன இடம்பெறும்.

# பொங்கற்றின அருளுரை

தைத் திருநாளன்று காலை நற்சிந்தனை ஒலி ரப்பு வேளையி நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கிய பொங்கற் புண்ணிய நாள் என்னும் அருளுரையை இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபன ஒலி பரப்பும்.

# ஆலயச் சூழல்தோறும் சைவச் சபைகள்

ஈழத்துச் சிதம்பரம் மணிவாசகர் சபை நடாத்திய மணிவாசகர் விழா மிகச்சிறப்பாக நிறைவுற்றது. தினமும் பல்லாயிரக் கணக்கான அன்பர்கள் நிகழ்ச்சிகளைக் கேட்டுச் சென்றனர். நல்லை ஆதீன ஓதுவா மூர்த்தி எஸ். ஆர். திருஞானசம்பந்தன் அவர்கள் பண்ணிசைக் கச்சேரி சிறந்த பக்கவாத்தியங்களுடன் நிகழ்த்தினர். இம்முறை அடியார்கள் கூட்டம் ஏராளமாயிருந்தது. இதுபோன்ற சபைகள் ஒவ்வொரு கோயிற் சூழலிலும், அல்லது ஊரிலும் விளங்கினால் திருவிழாக்கள் எவ்வளவு பக்தி சிரத்தையுடன் நிகழும் எனப் பக்தர்கள் பேசிக்கொண்டனர். மணிவாசகர் சபைப் பணிகள் மென்மேலும் சிறப்பதாக.

— ''ஈழ''

# ஹரிதாஸ் சுவாமிகள் ஈழம் வருகை

யோகத்தின் எல்லை கண்ட பிரம்ம ஞானியாகிய. ஞானனந்தகிரி சுவாமிகளின் பரிபூரண அருளைப் பெற்ற ஸ்ரீ சுவாமி ஹரிதாஸ் அவர்கள் கொழும்பு ஸ்ரீ ஞானனந்த சேவா சமாசம் சார்பாக வருகிற 12-1-77 புதன்கிழமை முதல் தினமும் மாலை 6 மணி முதல்தொடர்ச்சியாக பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் கோவில் மண்டபத்தில் சங்கீதகதாப்பிரசங்கம் நிகழ்த்தவிருக்கின்றார்கள் என அறிகிறோம்.

சென்ற ஆண்டு மூற்பகுதியிலும் சுவாமிகள் ஈழம் வந்த அமையம், யாழ்நகரிலும் ஒரு சில தினங்களுக்காவது சுவாமிகளை அழைத்து பஜனை, இன்னிசை விரிவுரை ஆகியன நடாத்துவிக்க ஒழுங்குகள் செய்வார்களென அநேகர் எதிர்பார்த்திருந்தனர். சுவாமிகள் வரவு கொழும்புமாநகருடன் பூர்த்தியானது. யாழ் வாசிகளோ ஏனையோரோ இங்கு அவரை அழைத்து வர முடியாது விட்டுவிட்டார்கள், இக்குறை தீர இம்முறையாவாது வடபகுதி மக்களுக்கு சுவாமிகள் தரிசனம் கிடைக்கச் செய்வார்களா? சங்கங்களோ, அன்றி, அன்பர்களோ முயன்று ஆவன செய்தல் விரும்பத் தக்கதாகும்.

இ கேதீஸ்வரநாதன்

ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும்
நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் —
நெஞ்செழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி.

Implanting firmly in the heart the five letters, the eight letters, the six letters, the four letters, the tender Letter and the great Letter, (I hoist) the Temple flag thus displaying the unabashed union (of the soul) brought about by the tender Letter (Sakti) with the Great Letter (God).

Hindu Organ

Friday, January 7, 1977

## Malaysian Hindus' Message

FREELY flourishing with the unfailing assistance of nature, Malaysia has been a great attraction to tourists from all the world over. Sweet and sustained memories go with travellers in Malaysia when they return to their own countries. That is the symbolic aspect of Malaysia.

Hindus in this pleasing country of Malaysia are an integral part of the nation. They live there in comfort and are therefore always dutiful Living a Hindu life—away from the mother country cannot always be a matter of routine. But it stands to the credit of the Malaysians and to the Hindus there that the latter are able to live as Hindus practising their religion without let or hindrance. That a Malaysian Minister professing the Muslim Religion should have along with Tamil-Speaking Ministers participated in the opening celebrations of the World Hindu Council in Kuala Lumpur and offered sincere congratulations and wishes is a matter of great significance.

The Hindu way of life in Malaysia has a history of its own. In a way there is a similarity in places like Malacca with the customs of the Northern Part of our Island. The impact of Portuguese invasion has had its effect in there parts. However the Hindus have been able to tide over the intrusion of alien religionists and to preserve the Temples for the future generations. Temple worship in Malaysia is significantly suggestive of the survival of Hindu Tradition.

Malaysian Hindus take great pride in conveying to their kith and kin in Sri Lanka the message of religious affinity and warmly thank visiting Ceylonese for their participation in religious observances while in Malaysia.

Here is a message that means much, Hindu Civilisation has lasted throughout the ages and has the potential to attract the attention of the entire world till eternity.

## Sri Lanka (Eelam) and The Tamils

S. Sivasubramaniam

Continued from last issue

The problems relating to the Tamil Language which are very vital in themselves are however not the only problems relating to the welfare of the Tamil people and the country. The entire position of the Tamil people in the general set up of the country has to be set right completely. Moreover, the constitutional machinery of Sri Lanka as a whole requires fundamental change apart from the provisions relating to the rights of the Tamil people.

Only by means of a new and suitable Constitution, could friendship, actuality and national unity and welfare be achieved. Again, in turn to evolve a suitable constitution, friendship and good-will between the various communities and creeds are pre-requisites. We are thus faced with a delicate and difficult situation; but it is not insurmountable if we seek to work with faith in the Grace of God, the ultimate Master of the Destinies of Man, Nations, Countries and the Universe. The application of moral principles based on Religion, in the conduct of national affairs, including matters political, is indispensable. if any group of people and the country as a whole are to exist in an enlightened and lasting state of happiness and prosperity.

## GANAPATYAM — SOME ASPECTS

BY V. SIVASAMY

The worship of the God Ganapati as the Supreme God is called Ganapatyam. The God Vinayaka or Pillaiyar as He is popularly known to the Tamils occupies a unique place in Hinduism. He is invoked firest, whatever the type of the work that is undertaken by the Hindus. He is given the first place in all rituals whether in the temples or elsewhere. According to the Hindu mythology He is the eldest son of God Siva and His consort Parvati. But His parents have given Him a place above them too. It is said that the axle of Siva's chariot was broken, When He went to destroy the castles of the wicked Asuras in the three worlds. Simply because He didn't pay homage to Vinayaka helped His younger brother God Muruka to get at His Beloved Goddess Valliyammai. Such is the greatness of God Pillaiyar

The origin of the worship of Pillaiyar harks back to great antiquity. Recently, the Finnish scholars like ASCO Parpola have opined that Vinayaka was worshipped in the Indus valley civilization. The earliest literary references to Ganapati occur in two of the hymns of the Rig Veda, dedicated to Brahmanasspoti and Indra. The former one begins as "Gananam tva Ganapatim" and it is repeated in all rituals where He is invoked. As He is the Lord of obstacles, Vighnaraja or Vighnesvara, he is invoked first, lest there be any calamity. There are a few references to Vinayaka in the Krsna Yajurveda, Aitareya Brahmana and Taittiriya Aranyaka which has the important Ganesa Gayatri verse. Later works too refer to Ganapati Among them, Atharvasiras Upanisad, Ganapati Upanisad Devipuranam may be cited. The Epics and especially the Puranas to refer to this God in detail,

The earliest image of the God Vinayaka is found in the North West India and Afghanistan. This belongs to the age of the Kusanas whose coins also bear the name 'Ganesa'. Among the sculptures at Mihintale in Sri Lanka dating to about one or two centuries earlier than the images from Aghanistan (2nd C. A. D.), there are some figures of the Ganas identified with Ganesa. **If this is so, the worship of Vinayaka was prevalent over a wider area of South Asia from Afghanistan to Sri Lanka at least by the second century A. D.** This evidence may throw some light on the history of Ganapatyam in South India. This will be taken up now.

Historians generally take for granted that the worship of Ganapati was introduced into Tamilnadu by the 7th century A. D., during the reign of the Paleava Narasuntavaiman after his successful raid at Vatapi. But it is difficult to accept this, as the contemporary Saiva saints Thirunavukkarasu and Thirugnanasambanthar refer to God Vinayaka in their 'thevarams". The picture and the ideas about Vinayaka that we get in the "thevarams" lead us to the conclusion that this worship was not something new, but part of the Saiva tradition dating back to several centuries earlier Further, recent archaeological excavations in Tamilnadu have unearthed images of Vinayaka of the 4th century A, D. In this context, it is well to remember the evidence from Ceylon where this worship was already known atleast by the 2nd or 1st century B. C. It is now reasonable to assume that Ganapatyam was known in Tamilnadu as early as the Sangam Age, as pointed out by Mr. K. V. Jaganathan.

Whatever the antiquity Ganapatyam had became an integral part of the Tamil Saiva tradition. The temples of this God is found all over India including Tamilnadu where He is a very popular deity. Recently Mr. M. Sathasivam from Tamilnadu has collected references to Pillaiyar in 755 Tamil literary works. Pi. Sri a great scholar has said "No other God has become an integral part of our life like the God Vinayaka". The various names of the God are found in the astottara namavali and Sahasra namali celebrating His greatness, Of these names, a good number of them are common to the other Saiva deities like Siva, and Skanda. It is generally held that Lord Siva Himself assumed the form of the Lord Vinayaka to destroy the evil symbolized as the Gajasura.

Vinayaka Symbolizes the sacred syllable "Om". This is said to be the basic, or the primordial sound (nada) the cause of the universe. Philosophers, saints and poets have written or sung about the various aspects of the forms of Vinayaka The Silpa texts describe the various forms of Vinayaka, of which 16 are more popular. One of the most popular of the forms is called the Bhakta Vinayaka with the pasa, ankusa, tusk and the modolia in each of the four hands and the trunk will touch the modolia in one of the hands.

He is said to be the great scribe who wrote down the Mahabharata is the God of wisdom. He bestows are types of benefits on His devotees He could be propitiated with whatever the devotee has within his means He is worshipped by all classes of people the rich and the poor. the learned and the illiterate. He will forgive the sins of His devotees. There are small and larger temples of this God in India and Sri Lanka. Besides, along the wayside and riverside too, one may

(Continued on page 3)

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday January 7, 1977.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPIRAKASAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org